முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.268/2025 இன் அ.வ.எண்.197/2014

வேல்மணி .... மனுதாரர் / 3 ம் பிரதிவாதி

/எதிர்/

1. மாணிக்கவாசகன்
2. நாகராசு (died)
3. வேல்முருகன்
4. கிருஷ்ணமூர்த்தி
5. லலிதா .... எதிர்மனுதாரர்/வாதி /பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 10.11.2025 அன்று என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ராஜேந்திரன் அவர்கள் அஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்தநிலையில், 3 முதல் 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

<u>உத்தரவு</u>

மனு உரிமையியல் நடைமுறைசட்டம், 1908 உத்தரவு 8 விதி 1A(3) ன் கீழ் நீதிமன்றத்தில் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர்/3 ம் பிரதிவாதி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>:-

அசல் வழக்கு விளம்புகை பரிகாரத்திற்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டு அதில் எதிர் வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறதாகவும், பிரதிவாதி தரப்பு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறதாகவும், தனது தரப்பில் சில ஆவணங்கள் வீட்டில் தேடிப்பார்த்ததில் கிடைத்தாகவும், ஆவணங்களை தனது வழக்கறிஞரிடம் காண்பித்தபோது ஆவணங்கள் இவ்வழக்கிற்கு முக்கியமானவை என்றும், அவைகளை தாக்கல் செய்ய வேண்டும்மெனறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், ஆவணங்களால் தனது கட்சியை நீதிமன்றத்திற்கு வலுவாக நிரூபிக்க முடியும் என்றும், ஆவணங்கள் வீட்டில் தேடிப்பாத்ததில் தற்போதுதான் கிடைத்தது என்றும், அதனால் உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு மேல் உத்தரவு செய்ய வேண்டியும், இல்லாவிடில் வீண் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், மனுவில் கண்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு அனுமதிக்க வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், ஏற்புடையது அல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாவா அசல் வழக்கு தன்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் கண்டபடியே தான் வாதியாக இருந்து கொண்டு எதிர்வாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் சொத்து சுவாதினத்திற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கை பொறுத்தவரையில் 1, 2 மற்றும் 3ம் எதிர்வாதிகள் வழக்கு சொத்தை குத்தகை சாகுபடி செய்து வந்திருப்பதாகவும் எதிர் வழக்கு நடத்தி வருகிறார்கள் என்றும், எனவே 1, 2 மற்றும் 3ம் எதிர்வாதிகள் அனைவருக்கும் வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், எனவே குத்தகை சாகுபடியாளர் அனுபவப்படியே எதிர்வாதிகள் வழக்கு நடத்தி வருகிறதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாவா அசல் வழக்கில் கண்ட 3ம் பிரதிவாதி தாவா மனுவில் மனுதரராக இருந்து கொண்டு மேற்படி 14.01.1991 அன்று ராசாயால் என்பவர் கட்டுமன்னார்கோயில் தாலுக்கா, திருமூலஸ்தானம் கிராமத்தை சேர்ந்த கலியபெருமாள் குமாரர் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு ஒரு பதிவு செய்யப்படாத உயில் சாசனம் ஏற்பட்டதாகவும், உயில் சாசனப்படியே கண்ட கிருஷ்ணமூர்த்தி என்பவர் வழக்கு

சொத்தின் உரிமையாளர் என்றும், மேற்படி வழக்கு சொத்தில் உரிமையாளர் கிருஷ்ணமூர்த்தி தாவா அசல் வழக்கில் கண்ட எதிர்வாதியிடம் வழக்கு சொத்தை குத்தகை சாகுபடியாக ஒப்படைக்கப்பட்டு அதன்படியே எதிர்வாதிகள் தாவா அசல் வழக்கை நடத்தி வருகிறதாகவும், எதிர்வாதிகள் தங்களின் எதிர்கட்சியை உறுதி செய்வதற்காக தாவா மனு தாக்கல் செய்யப்பட்டு அதன்படியே ஒரு பதிவு செய்யப்படாத உயில் சாசனம் மற்றும் தமிழ்நாடு குத்தகை சாகுபடி பதிவுபடியே எந்த குத்தகை சாகுபடியாளரும் பதிவு செய்யப்படாமலும் தாவா மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவில் கண்ட 14.04.1991ல் ஏற்பட்டுள்ளதாக தாவா மனுதாரர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயில் சாசனம் 1. தமிழ்நாடு ஆவண பதிவு சட்டப்படி இல்லாதவை . 2. 25.06.1992 அன்று கிருஷ்ணமூர்த்தி தாவா மனுதாரர்களுக்கு ஏற்படுத்தி இருக்கும் குத்தகை பத்திரம் 1வது ஆவணம் பதிவு செய்யப்படாத உயில் சாசனம், ராசாயால் திருமூலஸ்தானம் கிராமத்தை சேர்ந்த கலியபெருமாள் குமாரர் கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்படுத்தப்பட்டுவிட்டதால் கிருஷ்ணமூர்த்தியை தவிர தாவா மனுதாரர்கள் மூன்றாம் நபர்கள் ஆகும். எந்த சட்டபடியான சம்பந்தமும் இல்லாத தாவா மனுதாரர்கள் மூலமாக இந்த உயில் சாசன ஆவணத்தை தாக்கல் செய்ய அருகதை இல்லை ( No Local Stand) எனவே உயில்சாசனத்தை கோர்ட்டார் அவர்கள் இந்த வழக்கை ஒரு ஆவணமாக ஏற்றுக்கொள்ள தகுதியற்றது என்றும், 2ம் ஆவணத்தை பொறுத்தவரையில் தமிழ்நாடு குத்தகை சாகுபடியாளர் பதிவு

சட்டப்படியே இல்லாமல் பதிவு செய்யப்படாத தாவா மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு முத்திரை சட்டப்படியான எந்த ஸ்டாம்ப் முத்திரை வில்லை (Stamp) ஒட்டப்படாத ஆவணம் ஆகும். ஆவணம் எந்த சட்டப்டியான வகையிலும் ஏற்றுக்கொள்ளுதக்க இல்லை என்பதால் 2 ஆவணத்தையும் கோர்ட்டார் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்புதுடன் உரிய நிவாரணத்துடன் தாவா மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. **தீர்வு**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பப்டடது, ஆணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பு விசாரணை நிலுவையில் இருந்து வருகிறதாகவும், தனது தரப்பில் சில ஆவணங்கள் வீட்டில் தேடிப்பார்த்ததில் கிடைத்தாகவும், ஆவணங்களை தனது வழக்கறிஞரிடம் காண்பித்தபோது ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமானவை என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், **மாறாக**, 1, 2 மற்றும் 3ம் எதிர்வாதிகக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், குத்தகை சாகுபடியாளர் அனுபவப்படியே எதிர்வாதிகள் வழக்கு நடத்தி வருகிறதாகவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தமிழ்நாடு ஆவண பதிவு சட்டப்படி இல்லாத 25.06.1992ல் கிருஷ்ணமூர்த்தி மனுதாரர்களுக்கு ஏற்படுத்தி இருக்கும் குத்தகை பத்திரம் மற்றும் பதிவு செய்யப்படாத உயில் சாசனம் என

ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளததையும் கருத்தில் கொண்டு பரிசீலினை செய்ததில், முதலாவது ஆவணம் ராசாயால் எழுதி வைத்த உயில் -அசல். இரண்டாவது ஆவணம் கிருஷ்ணமூர்த்தியும் 1ம் பிரதிவாதி நாகராஜனும் எழுதி கொண்ட குத்தகை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருப்பது புலப்படுகிறது. சட்ட பிரிவின்படியும், receving of document is different from marking of documents என்பதை கருத்தில் கொண்டும், சட்ட பிரிவின்படியும், வழக்கில் மனுதாரருக்கு அசல் வழக்கில் தரப்பினை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பளிக்கும் முகமாகவும், விசாரணையின் போது ஆவணங்களை குறியீடு செய்யும்போது எதிர்தரப்பு ஆட்சேபனை செய்யும் பட்சத்தில் ஆட்சேபனையுடன் ஆவணங்களின் ஏற்புடைய தன்மையை கவனத்தில் கொண்டும் நீதிமனறம் குறியீடு செய்வதால் ஆவணங்களை பெற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரக்கு பாதகம் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் மனுதாரரின் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும், இந்த மனுவினை அனுமதிப்பதால் மட்டுமே ஆவணத்தை ஏற்றுக்கொண்டதாக கருத இயலாது என்றும், ஆவணத்தை குறியீடு செய்வது என்பது விசாரணை சமயத்தில் அந்த ஆவணம் இந்த வழக்கிற்கு ஏற்புடையதா? மற்றும் ஆவணத்தின் நம்பகத்தன்மை, உண்மைத்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மை ஆகியவற்றினை பொருத்தே அமையும் என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு நீதியின் நலன் கருதி விடை காண்கிறது. மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை **subject to**

**admissibility** அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7. முடிவாக, இம்மனு ஆவணங்களை ஏற்கும் தன்மை பொறுத்து அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

*Sd/-.S.Padmavathi,*
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

*Sd/-.S.Padmavathi,*

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.268/2025

இன்

அ.வ.எண்.197/2014

நாள்.13.11.2025